சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.72/2023

**PW1 கார்த்திக்** **22.01.2026**

**<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தமானது 16.03.2022 ல் தயார் செய்யப்பட்டு ஏன் 17.03.2022 ல் பதிவு செய்யப்பட்டது என கேட்டால் ஆவண எழுத்தர் 16.03.2022 ல் பத்திரத்தை தயார் செய்துவிட்டார். நான் படித்து பார்க்க வேண்டியதன் அடிப்படையில் அடுத்த நாள் பதிவு செய்யப்பட்டது. 16.03.2022 அன்று நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன் எவ்வளவு பணம் என்றால் ரூ.4 லட்சம் கொடுத்தேன். ஆனால் அந்த பணத்தை 17.03.2022 அன்று தான் கொடுத்தேன் ஆனால் ஆவணம் ஆனது 16.03.2022 அன்று தயார் செய்யப்பட்டுவிட்டது. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தின் மதிப்பு கிரய ஒப்பந்த தேதியில் எவ்வளவு இருக்கும் என கேட்டால் ரூ.5 லட்சம் தான் இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் அந்த சொத்தின் மதிப்பு கிரய ஒப்பந்த தேதியிலேயே ரூ.1 கோடிக்கு மேல் இருக்கும் என்றால் அது சரியல்ல. 16.03.2022 கிரய ஒப்பந்தம் போட்டதன் பின்னிட்டு 19.11.2022 அன்று தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பிற்கு முன்பாக பிரதிவாதியை அணுகி கேட்டேனா என்றால் இரண்டு முறை கேட்டிருப்பேன் அவர் காலஅவகாசம் கேட்டார் அதனால் தான் பின்னிட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நான் கிரயம் செய்து கொடுக்க கோரியும் அல்லது கிரய ஒப்பந்தத்தின் போது கொடுத்த பணத்தை திருப்பி தர கோரினேன். நான் கிரய ஒப்பந்தம் போட்ட போது தாவா சொத்தின் அசல் ஆவணங்கள்

என்னிடம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி